கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 25/2023

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா .02 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | வயது | 28 |
| தந்தை பெயர் | கணேசன் | ஜாதி | |
| தொழில் | எலக்டீரிசியன் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கிறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது குமரமங்கலத்தில் விசித்து எலக்டீரிசியன் ஆக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊர்காரர்கள் தான். அ.சா 1. திலகவதியையும் தெரியும் எங்கள் ஊர்காரர் தான். பிரச்சனை நடந்த போது நான் ஊரில் இல்லை. அதனால் எனக்கு எதுவும் தெரியாது. போலிசார்என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிசார் விசாரணையில் கடந்த 14.03.2023 ம் தேதி நான் காலை 10.00 மணிக்கு வீட்டில் இருந்த போது அ.சா 1 அவரது வீட்டில் தனியாக இருந்த போது 1 மற்றும் 2 எதிரிகள் அ.சா 1ன் வீட்டிற்கு வந்து அ.சா 1 யை கர்பிணி என்று பாராமல் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் என்றும், 2 வது எதிரி அ.சா 1ன் கையை பிடித்து கொண்டு 1 வது எதிரி அ.சா. 1 ன் வயிற்றில் உதைத்து, தலைமுடியை பிடித்து சுவற்றில் மோதியதாகவும், இச்சம்பவத்தை தான் நேரில் பார்த்து விட்டு அ.சா 1ன் கணவருக்கு தகவல் சொன்னதாகவும், பின்னர் அ.சா 1 யை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்த சென்றதாகவும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு

தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

# CC.No. 25/2023

2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 03- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வினோத் | வயது | 31 |
| தந்தை பெயர் | கிருஷ்ணன் | ஜாதி | |
| தொழில் | கொத்தனார் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கிறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது குமாரமங்கலத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது அண்ணன் மற்றும் அண்ணி ஆவார்கள். அ.சா 1 எனது மனைவி ஆவார். எனக்கும் எனது அண்ணனுக்கும் இடையே இட பிரச்சனை உள்ளது. 14.03.2022 ம் தேதி காலை 8.00 மணிஅளவில் எனக்கும் என் அண்ணனுக்கும் இடையே சண்டை நடந்தது. அதன் பின்னர் நான் வேலைக்கு சென்று விட்டேன். அப்போது என் வீட்டில் எனது மனைவி திலகவதி தனியாக இருந்தார். அப்போது ஆஜர் எதிரிகளான என் அண்ணன் மற்றும் அண்ணி இருவரும் என் மனைவியிடம் சண்டை போட்டார்கள். இந்த பிரச்சனைக்கு நீதான் காரணம் என்று குச்சிகாரி, தேவடியா என்று அசிங்கமாக திட்டினார்கள். அப்போது என் மனைவி கர்பிணி என்று தெரிந்து கொண்டே 2 வது எதிரி சரண்யா எனது மனைவியின் கையை பிடித்து இழுத்துக் கொண்டார். அப்போது 1 வது எதிரியான என் அண்ணன் என் மனைவியின் வயிற்றில் எட்டி உதைத்தார். பின்னர் தலை முடியை பிடித்து சுவற்றில் மோதிவிட்டார்.

2) அப்போது சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். பின்னர் நான் வேலைபார்த்த இடத்தில் இருந்து அறைமணி நேரத்தில் வீட்டிற்கு வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு எனது மனைவியை சிகிச்சைக்கா அழைத்து சென்றேன். அங்கு முதல் உதவி சிகிச்சை செய்து விட்டு மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு அழைத்து சென்ற போது மருத்துவர்கள்

எனது மனைக்கு ஸ்கேன் செய்து பார்த்த போது கர்பம் கலைந்துவிட்டதாக கூறினார்கள். அங்கு 15 நாட்கள் எனது மனைவி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கும் எனது அண்ணன் குடும்பத்தாருக்கும் நீண்ட நாட்களாகவே சொத்து பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது அண்ணனுக்கும் எனது மனைவிக்கும் நடந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 14.03.2022 ம் தேதி காலை 8.00 மணிக்கு நடந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ள சம்பவம் பற்றி நான் போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு பிரச்சனை எதுவும் நடக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால்சரியல்ல. எதிரிகள் எனது மனைவியை தாக்கவும் இல்லை அதனால் எனது மனைவியின் கர்பம் கலையவும் இல்லை என்றால் சரியல்ல. 14.03.2022 ம் தேதி எனது மனைவி கருவுற்று இருக்கவில்லை என்றால் சரியல்ல.

2) சொத்து பிரச்சனை காரணமாக எனது அண்ணன் குடும்பத்தை குற்ற வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக எனது மனைவியை வைத்து பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.